## திருப்பரங்குன்றம் பிரச்சினை : எங்கள் முதல்வர் இரும்பு மனிதர்!

# கலவரத்தை ஏற்படுத்த முயற்சித்தால் இரும்புக்கரம் கொண்டு அடக்குவார்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு எச்சரிக்கை!

சென்னை, பிப். 7-

'எங்கள் முதல்வர் இரும்பு மனிதர். வடமாநிலங்களைப் போல் கலவரத்தை ஏற்படுத்த முயற்சித்தால் இரும்புக்கரம் கொண்டு அடக்குவார்' என்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (05.02.2025) சென்னை, ஓட்டேரி, ஆதி படவேட்டம்மன் திருக்கோயிலில் ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருப்பணி களை பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு, இந்து சமய அறநிலையத்துறையில் எண்ணற்ற திருப்பணிகள் முடிவுற்று குடமுழுக்குகள் நடத்தப்பட்டு வருவதோடு, பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளும், திருவிழா காலங்களில் லட்சக்கணக்கில் கூடுகின்ற பக்தர்களுக்கு ஏற்றார் போல் அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் என தொலைநோக்கு பார்வையோடு பக்தர்களுடைய அனைத்து தேவைகளையும் நிறைவேற்றி தந்து வருகிறது.

இந்த அரசு ஏற்பட்ட பின், இதுவரை 2,504 குடமுழுக்குகள் நடத்தப்பட்டுள்ளதோடு, வருகின்ற 9 மற்றும் 10 தேதிகளில் 71 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற இருக்கின்றன. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களை புனரமைத்து பாதுகாத்திட அரசு ரூ.300 கோடியை மானியமாக வழங்கியுள்ளதோடு, திருக்கோயில் மற்றும் உபயதாரர்கள் நிதி ரூ.131 கோடியையும் சேர்த்து ரூ.431 கோடி மதிப்பீட்டில் 274 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்று ஆய்வு செய்யப்பட்ட ஓட்டேரி, ஆதி படவேட்டம்மன் திருக்கோயிலில் ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் திருப்பணிகளில் உபயதாரர்கள் மட்டும் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளை மேற்கொள்கின்றனர். இத்திருக்கோயிலுக்கு வருகின்ற மார்ச் 3 ஆம் தேதி நடைபெறவுள்ள குடமுழுக்கிற்கு இக்கோயிலின் சுற்றுபகுதியில் உள்ள 2,500 குடும்பங்களுக்கு மஞ்சள், குங்குமம் வழங்கி அழைப்பு விடுக்கப்படுவதோடு, குடமுழுக்கு அன்று 5,000 நபர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளது.

நங்கநல்லூர், ஆஞ்சநேயர் கோயிலுக்கு சுமார் 9 கோடி ரூபாய் செலவில் தங்கத் திருத்தேர் உருவாக்கும் பணிகளை உபயதாரர் ஒருவரே செய்துதர உள்ளார். இப்படி பல்வேறு வகையில் திருப்பணிகள் நடைபெறுவதற்கு உபயதாரர்கள் உறுதுணையாய் இருந்து வருகின்றனர். 2024 2025 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில் 100 நகர்புறத் திருக்கோயில்கள் திருப்பணி மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டதை செயல்படுத்தும் வகையில் பல்வேறு சிறு திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.



**ரூ.7,154 கோடி சொத்துகள் மீட்பு!**

கடந்த மூன்றரை ஆண்டுகளில் 925 திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.7,154 கோடி மதிப்பிலான 7,431 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மாநில வல்லுநர் குழுவால் 11,261 திருக்கோயில்களுக்கு திருப்பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக ரூ.5,515.54 கோடி மதிப்பீட்டிலான 23,234 திருப்பணிகள் துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் உபயதாரர்கள் மட்டும் ரூ.1,293 கோடி மதிப்பிலான பணிகளை செய்து தருகின்றனர்.

அதே நேரத்தில் திருக்கோயில் நிலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ள எண்ணிக்கை 7,154 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன நேற்றைக்குக் கூட வில்லிவாக்கத்தில் இருக்கின்ற ஆதிபுரீஸ்வரர் திருக்கோயிலில் 10 கோடி ரூபாய் மதிப்பிலான நிலம் மீட்கப்பட்டிருக்கின்றன அதே போல் திருக்கோவிலுடைய நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு எல்லைகற்கள் நடப்பட்டு இருக்கின்ற ஏக்கர் உடைய அளவு ஒரு லட்சத்து 81 ஆயிரம் ஏக்கர் அளவிடப்பட்டு கற்கள் பதிக்கப்பட்டு இருக்கின்றன இதுவரையில் வல்லுனர் குழு உடைய ஒப்புதல் 11,261 திருக்கோவில்களுக்கு வல்லுனர் குழு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கின்றன.

**தேவையற்ற பிரச்சினை!**

திருப்பரங்குன்றம் மலை குறித்த போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தயவு செய்து இந்து அமைப்பினர் என்று குறிப்பிட வேண்டாம். எங்களுடைய கண்ணோட்டத்தை பொறுத்தளவில் அதில் முழுக்க ஈடுபட்டவர்கள் பாரதிய ஜனதா கட்சியினர் என்று தான் நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். ஏதோ ஒரு எண்ணத்தை மையமாக வைத்து, இந்த ஆட்சிக்கு ஒரு அபாயத்தை உருவாக்க வேண்டும் என்று நினைத்து செயல்படுகின்றனர். நேற்றைய அந்த போராட்டம் என்பது தேவையற்ற ஒரு போராட்டம். நான் பார்த்த வகையில் புதிய தலைமுறை, தந்தி டிவி போன்ற பல ஊடகங்களில் அந்தப் பகுதி மக்களின் பேட்டியை எடுத்து நாங்கள் அண்ணன் தம்பிகளாக தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எங்களுக்குள் எந்த விதமான பிரிவினையும் இல்லை என்றும், இந்த பகுதியை சாராத வெளியூரிலிருந்து வருபவர்கள் தான் இந்த பிரச்சனையை கையில் எடுக்கிறார்கள் என்றும், ஆகவே இது தேவையற்ற பிரச்சனை என்று அந்த மக்களே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அப்படி என்றால் இந்த பிரச்சனையை தேவையற்ற ஒரு பிரச்சனையாக தான் நாங்கள் கருத வேண்டி இருக்கின்றது.

திருப்பரங்குன்றம் திருக்கோயிலை பொறுத்த அளவில் நேற்றைக்கு அங்கே ஒரு பெரிய கூட்டத்தை கூட்டி மதவாதம், இனவாதம், மொழிவாதம் என்று பிரிவுகளை ஏற்படுத்த நினைத்தார்கள். வட மாநிலங்களில் வேண்டுமென்றால் இதற்கு உண்டான சாத்திய கூறுகள் அமையக்கூடும். எச். ராஜா, அண்ணாமலை போன்றவர்களுக்கு சொல்லிக் கொள்வது என்னவென்றால் எங்கள் முதல்வர் எங்களை கொஞ்சம் அடக்கி வாசிக்க சொல்லி இருக்கின்றார். நீங்கள் வட மாநிலங்களைப் போல் இங்கும் கலவரத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நினைக்கின்றீர்கள். இங்கே இருக்கின்ற முதல்வர் உறுதிமிக்க முதல்வர், இரும்பு மனிதர். எங்கு கலவரங்கள் ஏற்பட்டாலும் இரும்பு கரம் கொண்டு அடக்க தயாராக இருக்கின்றார். ஆகவே இந்த பெரியார் மண்ணில், திராவிட மண்ணில், திராவிட மாடல் ஆட்சியில் இது போன்ற நிகழ்வுகள் நடைபெறுவதற்கு ஒரு காலமும் அனுமதிக்க மாட்டார்.

**அரசியல் குளிர்கால நினைக்காதீர்!**

திருப்பரங்குன்றம் மலையைப் பொறுத்தளவில் 1920 ஆம் ஆண்டு மதுரை சார்பு நீதிமன்றமும், 1930 ஆம் ஆண்டு லண்டன் பிரிவி கவுன்சிலும் ஒரு உத்தரவை வழங்கி இருக்கின்றது. அதைத்தொடர்ந்து 1958, 1975, 2004, 2017, 2021 ஆகிய ஆண்டுகளில் பல்வேறு உத்தரவுகளை நீதிமன்றங்கள் வழங்கி இருக்கின்றன. 2023 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் தொடரப்பட்ட இரண்டு வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்றன. இந்த கடந்த காலங்களில் எந்தெந்த அடிப்படையில் ஏழு வழக்குகளில் நீதிமன்ற உத்தரவு வழங்கியதோ அந்த நீதிமன்றத்தின் உத்தரவிற்கேற்றார்போல் தான் இந்த அரசு அதை மதித்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

**மாமன் மச்சான் உறவு!**

ஆனால் இதை வைத்து அரசியல் குளிர்காயலாம் என்று இந்த பிரச்சனையை கையில் எடுப்பவர்களுக்கு சொல்லிக் கொள்வது, எல்லோருக்கும் எல்லாம் என்ற கொள்கையோடு செயல்படும் இந்த அரசு நீதிமன்றம் என்ன வழிகாட்டுகின்றதோ அதன்படி தான் செயல்படும். முதலமைச்சர் அவர்கள் அனுமதியோடு கூடிய விரைவில் துறையின் அமைச்சர் என்ற வகையில் அந்த மலைக்கு செல்ல இருக்கின்றேன். திருக்கோயில் நிர்வாகம் மற்றும் தர்கா தரப்பினருக்கும் வழிபாட்டு முறைகளில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் நீதிமன்ற உத்தரவு அடிப்படையிலேயே தீர்வு காணப்பட்டு வருகின்றன. அங்கே இஸ்லாமியர்களும், இந்துக்களும் மாமன் மச்சான்களாக சகோதரத்துவத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தமிழகத்தில் அவர்களை அன்னியப்படுத்தி அதன் மூலம் தேர்தலில் லாபம் காணலாம் என்று நினைக்கின்றார்கள். இந்த பிரச்சனையில் அவர்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளால் மக்கள் வெகுண்டெழுந்து 2026 ஆம் ஆண்டு தேர்தலில் அவர்களுடைய வாக்கு சதவீதம் பூஜ்ஜியத்தை அடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. நேற்றைக்கு அங்கே கூடிய கூட்டத்தை பார்த்திருப்பீர்கள். ஒரு மதத்திற்கு ஒரு இனத்திற்கு எதிராக தான் கோஷங்களை போட்டுக் கொண்டிருந்தார்கள். பொறுப்புள்ளவர் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற பாரதிய ஜனதாவில் இருப்பவரே ஒலி பெருக்கியை பிடித்து மதத்தால், இனத்தால் மக்களை வேறுபடுத்திக் கொண்டிருக்கின்றார். இந்த ஆட்சியைப் பொறுத்தளவில் எல்லோருக்கும் எல்லாம். ஏற்கனவே என்ன வழிபாட்டு நெறிமுறைகள் இருந்ததோ என்ன வழிபாட்டை தொடர்ந்து கொண்டிருக்கின்றார்களோ, அதுவே தொடரும். நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் முதலமைச்சர் அவர்கள் செயல்படுவதற்கு தயாராக இருக்கின்றார்.

**இரட்டை நாக்கு படைத்தவர்!**

உள்ளாட்சித் தேர்தலில் கூட பிரதிநிதியாக முடியாத ஒருவர் இருக்கிறார். அவர் நீதிமன்றங்களை தேவையில்லாத போது தலைக்கு மேலே இருக்கின்றதை காட்டி இதற்கு சமம் என்றும், தேவை இருக்கின்றபோது நீதிமன்ற தீர்ப்பை ஆஹா ஓஹோ என்றும் பேசும் இரட்டை நாக்கு படைத்தவர். இனத்தால், மதத்தால், மொழியால் மக்களை பிளவுபடுத்த வேண்டும் என்று தான் அவருடைய நோக்கம். அவர் ஒரு மனிதனே அல்ல. ஆகவே அவருடைய கூற்றுக்களை எடுத்து இது போன்று விஷம பிரச்சாரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டாம் என்று பத்திரிகை நண்பர்களை கேட்டுக்கொள்கிறேன்.

பழனி, தைப்பூசத்திற்கான ஏற்பாடுகள் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. ஒரு நாளைக்கு 20,000 நபர் வீதம் 10 நாட்களுக்கு இரண்டு லட்சம் நபர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி இன்று காலை பழனி சட்டமன்ற உறுப்பினர் செந்தில் குமார் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

போதிராஜன் மேம்பாலத்தை பொறுத்த அளவில் நான் 2001-ல் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது, போதிராஜன் நகர், சீனிவாசபுரம் போன்ற பகுதிகள் உள்ளடக்கிய பகுதிக்கு ரயில்வே டிராக் செல்கின்றதால் குறுகலாக இருந்ததால், மேம்பாலம் அமைக்க அண்ணா பல்கலைக் கழகம் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அங்கு குடிநீர் மற்றும் கழிவு நீர் குழாய்கள், மின்சார கேபிள்கள் அதிகளவில் செல்கின்றன. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் நானும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அண்ணன் நேரு அவர்களும், சட்டமன்ற உறுப்பினரும் போதிராஜ நகர் பணியினை துவக்கி வைத்தோம்.

இந்த மேம்பாலத்தை பொறுத்தளவில் ரயில்வே கிராசில் வருகின்ற இடங்களில் ரயில்வேயினுடைய பணியும் இருக்கின்றது. ஆகவே, ரயில்வே எடுத்துக் கொண்ட பகுதி பணி முடித்த பிறகு தான் மாநகராட்சி பணிகளை தொடங்க வேண்டியது இருக்கின்றது. இது தொடர்பாக ஒருங்கிணைப்பு கூட்டங்கள் நடத்தப்பட்டு பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. மீண்டும் ஆய்வினை மேற்கொண்டு விரைந்து முடிப்பதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம்.

**குத்தம்பாக்கம் பேருந்து நிலையம் மே மாதம் செய்யப்படும்!**

குத்தம்பாக்கம் பேருந்து முனையத்தில் கடந்த காலங்களில் திட்டமிடல் இல்லாததால் காலதாமதம் ஏற்பட்டது. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு புதிதாக 22 பணிகளை மேற்கொண்டு இருக்கின்றோம். வாரம் ஒரு முறை இது தொடர்பாக ஆய்வினை மேற்கொண்டு வருகிறோம். வரும் ஏப்ரல் அல்லது மே மாதத்திற்குள் அந்த பேருந்து நிலையத்தை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவோம். நிச்சயம் கிளாம்பாக்கம் பேருந்து முனையம் போல் அந்த பேருந்து நிலையமும் மக்களுக்கு அதிக அளவு பயன் தரும் என்பதை நம்புகிறோம்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு பேட்டியளித்தார்.



உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு அவர்களின் 100வது பிறந்தநாளினை முன்னிட்டு கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர் வட்டம் வையம்பாளையம் கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் அமையப் பெற்றுள்ள உழவர் பெருந்தலைவர் சி நாராயணசாமி நாயுடு அவர்களின் திருஉருவச் சிலைக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மின்சாரத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, மாநகராட்சி மேயர் திருமதி.ஆ.ரங்கநாயகி ராமச்சந்திரன், வருவாய் கோட்டாட்சியர் கோவிந்தன், தமிழக விவசாயிகள் சங்க தலைவர் வேட்டவலம் மணிகண்டன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர் ஆ.செந்தில் அண்ணா ஆகியோர் உள்ளனர்.

## பேறிஞர் அண்ணா 56வது நினைவு நாள்! மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில்

# புதுக்கோட்டையில் அமைதிப் பேரணி! அண்ணா சிலைக்கு மாலையணிவிப்பு!

### கவிச்சுடர் கவிதைப்பித்தன் – டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. – த.சந்திரசேகரன் பங்கேற்பு!

புதுக்கோட்டை. பிப்.7-

பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு நாளை முன்னிட்டு மாவட்ட தி.மு.க. அலுவலகத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டுச் சென்று புதுக்கோட்டையில் அண்ணா சிலைக்கு வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட செயலாளர் கே.கே செல்லப்பாண்டியன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது,

இந்நிகழ்வுகளில் கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, த.சந்திரசேகரன், கே.ஆர்.என். போஸ், செ. அசோக்பாண்டியன். அரு.வீரமணி, சுப. சரவணன், பி.ராஜேஸ்வரி, எஸ்.எஸ்.கருப்பையா, எம்.லியாகத் அலி, சு.சண்முகம், கே.எஸ்.சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், எம். பரமசிவம், சி.சண்முகம், ஆர்.சாமிநாதன், ஓ.எஸ். வெங்கடாச்சலம், இராசு. சந்தோஷ், பி. அண்ணாத்துரை, எம்.எஸ்.ஏ.முகம்மது ரிஷா, வை.கோ.ராஜன், எம்.எம்.பாலு, அ.ரெத்தினம், மழையூர் ராமசாமி, வே.ராஜேஸ்,

இராம.செல்வராஜ், கே.எஸ்.ச. இளையச்சூரியன், சி.அரங்கநாயகம், டாக்டர் மு.க. முத்துக்கருப்பன், கவிவேந்தன், செந்தாமரை பாலு, கே. எம்.கே.ரவிக்குமார், ராஜேந்திர சோழன், அஸ்ரப் அலி, எஸ்.வி.ஆர். ஸ்டாலின் ராஜா, ஆ.மரிய எட்வின், தெய்வானை, வெற்றிச்செல்வன், டி. அப்புக் காலை, ஆ.ஜேம்ஸ், கி.சுப்பிரமணியன், எம். கே.அறிவுடை நம்பி, ராயல் சபா, டான்சி ராஜேந்திரன், தட்டாம் பட்டி ஆறுமுகம், பழனி வேலு, மா.மணிவேலன், பா.ரெங்கராஜ், வி.ஏ.டி.சி. ராஜேந்திரன், கனகம்மன் பாபு, காதர் கனி, டி. அப்புக்காளை, செ.ரமேஷ், ஏ.எம்.சிற்றரசு, சிப்காட் சந்திரசேகரன், பால்ராஜ், எல்.ஐ.சி ரமேஷ், கண்மணி சுப்பு, இதயம் அப்துல்லா, சுந்தர்ராஜ், மேல விடுதி ஆறுமுகம், விஜயக்குமார், பிரேம் ஆனந்த். தியாகு, , அருண்குமார், ஆர்.எம். சத்யா,ராமச்சந்திரன், செல்வம், க.செல்லையா, சந்திரசேகரன், எழில்ராஜா, மாலையீடு பிரபு, மேட்டுப்பட்டி சின்னத்துரை, கே.எம்.எஸ். குமார், ராமலிங்கம், ஏ.எஸ். கருணாநிதி, அற்புத ஹென்றி, உடையப்பன், அஞ்சான் சரத், ஓவியா மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## திருப்பரங்குன்றத்தில் கலவரத்தை தூண்ட சிலர் முயற்சி!

# இந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழுகின்ற மாநிலம் தமிழ்நாடு!

### திருமங்கலத்தில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை பிப் 7

"திருப்பரங்குன்றம் விவகாரத்தில் சிலர் ஏதாவது கலவரத்தை தூண்ட முடியுமா என பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், நிச்சயம் அது தமிழ்நாட்டில் நடைபெறாது. இந்துக்களும், முஸ்லிம்களும் சகோதரர்களாக வாழுகின்ற மாநிலம் தமிழ்நாடு என திருமயத்தில் சட்டத்துறை அமைச்சர் என்.ரகுபதி பேட்டியளிக்கையில் குறிப்பிட்டார்.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியின் நூற்றாண்டு விழா நடைபெற்றது. இந்த விழாவில் கலந்து கொண்ட தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள கலையரங்கத்தையும் சுற்றுப்புற சுவரையும் நூற்றாண்டு கல்வெட்டையும் திறந்து வைத்தார்.

இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி கூறுகையில்:

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல் வெற்றி தி.மு.க.விற்கு உறுதி செய்யப்பட்ட வெற்றி. அதே போல் வரக்கூடிய பொது தேர்தலிலும் தி.மு.க. கூட்டணி தான் வெற்றி பெறும். அதில் எந்த வித சந்தேகமும் கிடையாது.

தமிழ்நாட்டில் எப்போதும் அண்ணன் தம்பிகளாக சகோதரர்களாக இருந்து வருகின்றோம். அந்த இடத்தில் சிலர் ஏதாவது கலவரத்தை தூண்ட முடியுமா என பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயம் அது தமிழ்நாட்டில் நடைபெறாது. இந்துக்களும் முஸ்லிம்களும் சகோதரர்களாக வாழுகின்ற மாநிலம் தான் தமிழ்நாடு, எங்களைப் பொருத்தவரைக்கும் நிச்சயம் திருப்பரங்குன்றம் விவகாரத்தில் நல்ல முடிவு ஏற்படும், அனைவரும் அமைதியாக இருப்பார்கள் என நம்புகிறோம், அதற்கான முயற்சிகளை அரசு உரிய முறையில் எடுக்கும், இதை பெரிய விவகாரமாக்கி அதில் லாபம் அடைய வேண்டும் என்று நினைக்கும் தீய சக்திகளை ஒடுக்குவோம்.



ஆளுநர் உரை புறக்கணித்ததால் தமிழ்நாடு மக்கள் பாதிப்படையவில்லை ஆளுநர் உரையை வாசித்தாலும் வாசிக்காவிட்டாலும் மக்களுக்குள்ள அடிப்படை வசதிகளை இந்த அரசு செய்து தான் வருகிறது. ஆளுநர் தான் அவரது கடமையை செய்ய தவறி விட்டார். நாங்கள் எங்கள் கடமையை செய்ய தவறவில்லை மக்களுக்கான பணிகளை அரசு என்ன செய்ய வேண்டுமோ அதை செய்து கொண்டிருக்கின்றோம்.

சட்ட மசோதாவை திருப்பி அனுப்பிய விவகாரம் அதேபோல துணைவேந்தர் நியமன விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் நல்ல தீர்ப்பை தரும் என்று எதிர்பார்க்கின்றோம்.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் ஆட்சி மன்ற குழுவை அமைத்துள்ளோம். அந்த நிர்வாகம் சிறப்பாக தான் செயல்பட்டு வருகிறது. எங்கெங்கெல்லாம் துணை வேந்தர்கள் இல்லையோ அங்கே எல்லாம் மூன்று பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு சிறப்பாக நிர்வாகத்தை தந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு என்ற மாநிலம் இந்தியாவில் இருக்கிறதா? என்பதை ஒன்றிய அரசு மறந்து விட்டதா என்ற சந்தேகம் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையை பார்த்தால் தெரிய வருகிறது. அவர்களுக்கு வாக்களிக்க வில்லை என்பதற்காக தமிழ்நாட்டை அவர்கள் புறக்கணித்தாலும் ஒன்றிய அரசு திட்டத்தை தான் அவர்கள் புறக்கணிக்க முடியுமே தவிர மக்களுக்கான நல்ல திட்டங்கள் போவதை புறக்கணிக்க முடியாது.

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் கொடுக்கும் பணம் எங்களுடைய பணம். ஒன்றிய அரசின் பணம் அல்ல. எங்களது திட்டத்திற்கான பண வசதியை உருவாக்கிக் கொண்டு மக்களின் தேவைகளை நிறைவேற்றுவோம்.

ஒன்றிய அரசு பொதுவாக தரும் நிதிகளை பயன்படுத்துவோம்.

கூடுதல் நிதி கூடுதலான அறிவிப்புகள் தமிழ்நாட்டிற்கு கிடைக்கவில்லை.

இந்தியாவில் உள்ள மாநிலங்களிலேயே தமிழ்நாட்டை மிக மிக புறக்கணித்து ஒன்றிய அரசு வஞ்சிக்கிறது.

இசிஆர் விவகாரத்தில் தெளிவான பதிலை நாங்கள் தந்து விட்டோம்.

ஊட்டிக்கு சுற்றுலா செல்வதற்காக அந்த காரில் சென்றவர்கள் தி.மு.க. கொடியை பயன்படுத்தியுள்ளனர் .அவர்களுடைய உறவினர்கள் எல்லாம் அதிமுகவினர் என்று அவரே ஒத்துக் கொண்டுள்ளார்.

அவருக்கோ அவரது குடும்பத்தினருக்கும் தி.மு.க.வுக்கும் ஒரு தொடர்பும் கிடையாது.

எங்களோடு தொடர்பில்லாதவர்கள் எப்படி எங்களோடு முடிச்சு போட முடியும் அதனால் தி.மு.க.வுக்கும் அவர்களுக்கும் எந்த விதமான தொடர்பும் கிடையாது.

வீண் பலி சுமத்திய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி தான் வெட்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (05.02.2025) மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் தலைமையில் அனைத்து மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுத் துறை செயலாளர் ரீட்டா ஹரிஷ் தக்கர், பொதுத் துறை இணை செயலாளர் / முன்னாள் படைவீரர் நலத் துறை இயக்குநர் பவன்குமார் கிரியப்பனவர், மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

